முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 9/2019

இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கற்பகம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மகாலிங்கம் | கிராமம் | : வெள்ளாண்டிபாளையம் |
| வயது | : | தாலூக்கா | : அவினாசி |
| நாள் | : 14-11-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எனக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.254/6 ல் ஒரு கட்டிடம் இருந்தது என்றால் சரிதான். அந்த கட்டிடம் வணிக வளாகம் என்றால் சரிதான். அது போக கால்நடைகள் கட்டுவதற்காக கூரைச்சாளை ஒன்றும் உள்ளது. வணிக வளாகத்தை அரசுக்கு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த கட்டிடம் கட்டுவதற்கு பெறப்பட்ட அங்கீகாரத்தை தாவாவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் அனுமதி உள்ளது. அந்த அங்கீகாரத்தை தாக்கல் செய்தால் அதிலுள்ள வழிதட விவரங்கள் தெரிய வரும் என்பதால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

2. கருப்ப கவுண்டருக்கு 4 மகன்கள் உள்ளனர். அதை மறைத்து 3 மகன்கள் என எதிருரையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. கருப்ப கவுண்டரின் 3 மகன்கள் மட்டுமே ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழுடன் முறையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். கருப்ப கவுண்டரின் மூத்த மகன் ராமசாமி கவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதிகளின் தகப்பனார் கிரயம் பெற்றதால் மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3. நான் எதிருரையில் சொல்லியது போல் தாவா தடத்தை ஒருபோதும் பயன்படுத்தி வரவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் என் பாகத்திற்கு தென்புறமாக உள்ள கிழமேல் தடம் தான் எங்களது பூர்வீக தடமாகும். தொடர்ந்து இந்த தாவா தடத்தை பயன்படுத்தி வருகிறோம். இது தான் எனது பத்திரப்படி எனக்கு பாத்தியப்பட்ட வழி தடமாகும். எனது முன்னோர்கள் காலத்தில் இருந்து அந்த பூர்வீக தடத்தை தான் பயன்படுத்தி வருகிறோம்.

4. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள க.ச.எண்.254/6 பூமி பிரதிவாதியின் பூமி என்றால் சரிதான். அந்த புகைப்படம் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.14 ல் காண்பிக்கப்படுவது போல் கேட்டின் வழியாக மெயின்ரோட்டில் இருந்து எங்கள் பாகத்திற்கு செல்ல தடம் உள்ளது என்றால் சரிதான். தாவாவிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தடமானது எங்களுக்கு ஒருபோதும் பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நான் உண்மையை தான் கூறுகிறேன். நான் முறையாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். மூல ஆவணங்கள், பத்திரங்கள் முறையாக உள்ளது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA
Digitally signed by VANITHA
Date: 2025.11.14 15:05:11 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.